2022 மார்ச் 21]

இதனை எந்த நேரத்தில் எப்போது ஆரம்பிப்பீர்கள் என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.ஜி.ஆர். அவர்கள் குறிப்பிட்டதைப்போல, திருவள்ளூர்* bypass *சாலைத் திட்டம் கிடப்பிலே கிடந்தது. அதற்குக் காரணம், அங்கு சாலை போடுவதா, இல்லையா என்றும், அந்தப் பாலத்தைக் கட்டுவதா, இல்லையா என்றும் பத்தாண்டுக் காலம் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்ததுதான். இப்போதுதான் வழக்கு முடிவுக்கு வந்துள்ளது. எனவே, நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், அந்த* bypass *சாலையை அமைக்க வேண்டும் என்று அரசு முடிவு செய்த காரணத்தினால்தான், தற்போது* Detailed Project Report *தயார் செய்கிறார்கள். ஆகவே, அந்த* bypass *சாலையைப் போடுவதற்கு அரசாங்கம் தயாராகிவிட்டது என்றுதான் அர்த்தம். எனவே,* DPR *பணிகள் முடிந்தவுடனேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று அதற்கு நிதி ஒதுக்கி அந்த* bypass *சாலை அமைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

27—

தொழிற்பூங்கா

***17837—திரு. மு. ஜெகன் மூர்த்தி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வைத்திணான்குப்பம் தொகுதியில் தொழிற்பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கீழ்வைத்திணான்குப்பம் தொகுதியில் தொழிற்பூங்கா அமைக்கும் உத்தேசம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.*

திரு. மு. ஜெகன் மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கே.வி. குப்பம் தொகுதியில் எந்தவிதமான, ஒரு சிறிய தொழிற்சாலைகூட இல்லை. அப்பகுதி முழுக்க முழுக்க விவசாயம் நிறைந்த கிராமங்களாக உள்ளது. அதிலும்கூட, வானம்பார்த்த பூமியாகத்தான் இருக்கின்றது. ஆயிரக்கணக்கான படித்த இளைஞர்கள் பெங்களூருவிற்கும், சென்னைக்கும்தான் கூலி வேலைக்குச் செல்கிறார்கள். ஆகவே, அப்பகுதி இளைஞர்களின் வாழ்க்கையை மேம்படுத்த கே.வி. குப்பம் தொகுதியில் தொழிற்பூங்கா அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியில் தொழிற்பூங்கா அமைக்க வேண்டும் என்று சொன்னால், அங்கே ஒருங்கிணைந்த போதிய நிலம் கையிருப்பில் இருக்க வேண்டும். அதுபோல் அங்கு முறையான சாலைப் போக்குவரத்து, இரயில் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து போன்ற வசதிகள் இருக்க வேண்டும். தண்ணீர் மற்றும் மின்சார வசதிகள் இருக்க வேண்டும். இந்த சாத்தியக்கூறுகள் எல்லாம் அந்தத் தொகுதியில் ஒருங்கே அமையப்பெறும் என்று சொன்னால், அதை ஆராய்ந்து தொழிற்பூங்கா அமைக்க பின்னர் முடிவெடுக்கலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.*

திரு. மு. ஜெகன் மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்பூங்கா அமைப்பதற்கான அரசு நிலங்கள் அங்கு இருக்கின்றன. ஆகவே, அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்து தொழிற்பூங்கா அமைத்துத் தருவதற்கு ஆணையிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

2022 மார்ச் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கே.வி. குப்பம் தொகுதியை ஓரளவிற்கு நான் அறிவேன். அது, நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுடைய முன்னாள் தொகுதி மற்றும் அதில் ஒரு பகுதி அவருடைய தொகுதியில் இருந்தது என்ற காரணத்தினால் நானும் அந்தப் பகுதியைப் பற்றி அறிவேன். இந்த ஆண்டு வேலூர் மாவட்டத்தில் ஒரு புதிய தொழிற்பூங்கா அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலுடன் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கடந்த 18 ஆம் தேதி நிதிநிலை அறிக்கையினைச் சமர்ப்பித்தபோது அறிவித்திருக்கிறார்கள். எனவே, கே.வி. குப்பம் தொகுதியில் தொழிற்பூங்கா அமையக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்குமென்று சொன்னால், எதிர்காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, அரசு அதுகுறித்து பரிசீலனை செய்யும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள். மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

28—

சமுதாயக் கூடம்

***4022—திரு. கி. அசோக்குமார்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், சின்னமுத்தூர் கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், சுண்டேகுப்பம்

TRUTH ALONE TRIUMPHS